RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-222923

# நெடுநல்வாடையில் உணர்வும் பொழுதும்

ரா. ஆர்த்தி [அ, *], ம. கீதா [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# Sensation and entertainment in Nedunalvaadai

R. Aarthi [a, *], M. Geetha [a]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641 043, Tamil Nadu, India

* Corresponding Author: aarthirathinam2805@gmail.com

Received: 26-09-2022
Revised: 08-11-2022
Accepted: 13-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

All the actions of man are based on his moods and feelings, but the emotion that emerges from the human being arises from the mind. Based on the time and environment emotion appears and it results as a person's behaviour. It is said that emotions are the actions that appear and perform not only for the human species, but the living things that appeared in the world also emotional feelings and emotions are manifested according to the weather and climate. Focusing on emotions, this article explains the feeling of animals, the feeling of worship, the feeling of the time, the loneliness of the heroine, the sense of duty and the sense of personality of the hero.

**Keywords:** Emotions, Season, Actions, Human Behavior, Loneliness, Personality

## முன்னுரை

சங்க கால இலக்கியமான பத்துப்பாட்டின் தொகுப்புகளில் ஒன்றான நெடுநல்வாடையில் பாடல்கள் அனைத்தும் கூதிர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவையே. சங்ககால மக்கள் தனக்கேற்றவாறு நிலங்களையும் பொழுதுகளையும் பிரித்து வாழ்ந்துள்ளனர் காதலும் வீரமுமே சங்க பாடல்கள் என்று இல்லாமல் வீட்டையும் நாட்டையும் போற்றி மக்கள் பொழுதுகளுக்கு ஏற்ற உணர்ச்சிகளால் பின்னப்பட்டு வாழ்ந்து உள்ளார்கள் (Sethuraman, 2017). இக்கட்டுரை கூதிர் காலத்தில் தலைவனை பிரிந்த தலைவி தனிமை உணர்வால் துயரப்படுவதையும் குளிர்காலத்தில் மக்கள் விலங்குகளின் உணர்வை பற்றியும், அரசனின் ஆளுமை உணர்வு கடமை உணர்வுகளை விவரிக்கிறது.

## உளவியலின் உணர்ச்சி வரையறை

ஒருவரின் சூழ்நிலைகள், மனநிலை அல்லது மற்றவர்களுடனான உறவுகளிலிருந்து பெறப்பட்ட வலுவான உணர்வு. உணர்ச்சிகள் குறிப்பிடத்தக்க உள் மற்றும் வெளிப்புற நிகழ்வுகளுக்கான பதில்களாகும் என உணர்ச்சியின் லெக்சிகோ வரையறை கூறுகிறார் (Ravichandran, 2015).

### கூதிர் காலத்தில் விலங்குகளின் உணர்வு

கூதிர் காலத்தில் குளிர்ச்சியானது மிகுந்து காணப்படும். இக்காலங்களில் விலங்குகளின் வழக்கத்தில் ஒரு முழுமையான மாற்றத்தை குறிக்கிறது. ஏனெனில் அவை வழக்கமாக வாழும் வாழ்விடத்தின் சூழல் மாற்றப்படுகிறது.

விலங்குகளின் வாழ்விடம் மாற்றத்தை நக்கீரர் குறிப்பிடுகிறார்.

"ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்

ஏறுடை இனநிறை வேறு புலம் பரப்பிப்

புலம் பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்" (Muthu Ramamurthy, 2012)

வெள்ளத்தை வெறுத்த கொடிய கோழையுடைய இடையர்கள் ஏற்றையுடைய நிரைகளை பசு எருமை ஆடு போன்றவற்றை வேறு நிலங்களுக்கு மாற்றம் செய்கின்றன. அவைகள் எல்லாம் தனக்கு துணையான இணைகளை விட்டு வேறு இடம் சென்றதால் தனிமை உணர்வில் வாடுகிறது என்று குறிப்பிடுகிறார்.

"மா மேயல் மறப்ப, மந்தி கூர,

பறவை படிவன வீழக் கறவை

கன்று கோள் ஒழியக் கூடிய வீசி,

குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள்" (Muthu Ramamurthy, 2012)

விலங்குகள் நெய்தலை மறந்தன குளிர்காலத்தில் குளிர் மற்றும் பணியால் வயல்களை மூடுவதால் உணவைப் பெறுவது அவ்வளவு எளிதானது அல்ல. உணவுகள் தனக்கு கிடைக்கவில்லை என்ற வருத்தத்தினால் பசுக்கள் சோம்பல் உணர்விற்கு பின் தனது துணையான இணையை விட்டு வேற்று இடம் புகுந்த தனிமை உணர்வாளும் தனது கன்று குட்டி பால் உண்ண வருவதை சினத்தோடு எட்டி உதைக்கின்றது.

பருவ கால நிலையை உணர்ந்து வேற்று இடத்திற்கு பறந்து செல்லும் பறவைகளும் கூதிர் கால தன்மையினால் தன் இயல்பை மறந்து கிடக்கிறது

"மனையுறை புறாவின் செங்காற் சேவல்

இன்புறு பெடையோடு மன்று தேர் துணியாது

பகலும் மயங்கி கையாற்று மதலைப் பள்ளி மாறுவன இருப்பக்" (Kathir Muruku, 2018)

வீட்டு புறாக்கள் இணைப்புறாக்கள் செங்கல்புறாக்கள் ஆணும் பெண்ணும் சேர்ந்தே மேயும் பழக்கம் கொண்டவை. கூதிர் கால தன்மையினால் அவை மேயவில்லை. மாட இருக்கையில் இடம் மாறி மாறி உட்காருகின்றன இரவிலும் பகலிலும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டு மயங்கி கிடக்கின்றன.

## அச்ச உணர்வை போக்க இறை உணர்வு

பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையானது முழுக்க இயற்கையுடன் சார்ந்திருந்தது. இயற்கையின் பேராற்றலுடன் போராடி வாழ வேண்டிய நெருக்கடிக்குள்ளான சூழலில் மர்மம் நிறைந்த எதையும் நம்பிக்கையின் அடிப்படையின் அறியும் முயற்சி ஏற்பட்டது. இந்த நம்பிக்கைகளை நாளடைவில் சடங்குகளாக மாறின மாலை வேலையான அந்திப் பொழுதில் தெய்வத்தை வணங்கும் பெண்கள் பற்றி நெடுநல்வாடை சித்தரித்துள்ளது.

"மடவரல் மகளிர் பிடக்கை பெய்த

செல்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து

அவ் இதழ் அவிழ் பதம் கமழ பொழுது அறிந்து

இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ

நெல்லும் மலரும் தூஉய் கை தொழுது

மல்லல் ஆவணம் மாலை அயர" (Saminatha Iyer, 2018)

பெண்கள் பசுமையான காம்புகளைக் கொண்ட செம்மொழையின் அரும்புகளை அழகிய பூந்தட்டுகளில் வைத்திருப்பார். அவை மலர்ந்து மனம் வீசுவதால் மாலை வேலை வந்து விட்டது என அறிந்த பெண்கள் இரும்பு விலக்கி நெய் ஊற்றி திரியை கொளுத்துவர். நெல்லையும் மலரையும் தூவி உள்ள தெய்வத்தை வழிபட்டனர். அந்திப் பொழுதில் விளக்கினை ஏற்றி இறைவனை வழிபடும் சடங்கு இன்றளவும் நிலவி வருகின்றது. இரவு வேளையில் அணங்குகளும் காட்டு விலங்குகளும் உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்தலாம் என்ற அச்ச உணர்வின் காரணமாக விளக்கேற்றி ஒளியை வழிபட்டுள்ளனர் அந்தி வேளையில் ஒளியை வணங்குவதன் மூலம் இரவு குறித்த அச்ச உணர்வை கடக்க முயன்று உள்ளனர் என்பதைப் பாடலில் புலப்படுகிறது.

## பெண்கள் தகவமைக்கும் உணர்வு

சூழலுக்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொள்ளாத உயிரினங்கள் அழிந்து விடுகின்றன ஒத்து வாழ் அல்லது அழிந்து போ என்பதே வரலாற்றின் அடிப்படை பலனறிதல் கற்றல் நினைவாற்றல் சிந்தித்தல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் புலன் உணர்தல் வளர்த்தல் மற்றவரிடம் இருந்து வேறுபடுதல் என்பதைப் பொறுத்தே மனித வளர்ச்சி இருக்கிறது என்கிறார் ப்ராய்ட். புலன் உணர்வும் நடைமுறை அறிவும் இருந்தால் மட்டுமே மனிதன் தன்னை அடுத்த தளங்களை நோக்கி நகர்த்த முடியும். மனிதன் தனக்கேற்ற புறச் சூழலுக்கு தக்க தன்னை தகவமைத்து கொள்கிறான் என்பதை காட்டுகின்றன கீழ் வரும் பாடல்

"கடுஞ்சூல மகளிர் பேணி கைதொழுது

பெருந்தோர் சாலினம் மடுப்ப" (Saminatha Iyer, 2018)

கூதிர் காலத்தின் தன்மையால் பெண்கள் மனைகளில் வாடகைக்கு ஏற்ப தங்களை திருத்திக் கொள்ளல் பாசறையில் அரசனும் வீரர்களும் தங்களை புணருத்தாரம் செய்ய முயல்கள் என தகவமைத்து வாழ்வது குறிப்பிடத்தக்கது.

## தலைவியின் தனிமை உணர்வு

மனிதனின் சமூக உறவுகள் மூலம் மற்றும் குறிப்பாக ஒருவருக்கு உள்ளிருக்கும் உணர்வின் இணக்கத்தின் தரத்தில் விரும்பியதை விட குறைவாக இருப்பதாக அந்த நபரால் உணரப்படும் போது தனிமை உணர்வு தோன்றும் துயர உணர்வை தலைவியின் மூலம் நக்கீரர் புலப்படுத்துகிறார்.

"அரந் தாங்கிய அலர்முனல யாகத்துப்

பின்மை நெடுவிழ் தாழத் துணைதுறந்து

நன்னுதல் உலறிய சின்ன மெல்லோதி

நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண் வாயுறை அலத்திய

வலம்புரி வலையோடு கடிகை நூல் யாத்து

அம்மா சூழ்ந்த அதிர்நோர் கலிங்கமோடு பூனையா ஓவியம் கடுப்ப

புனைவில்" (Muthu Ramamurthy, 2012)

தனிமை என்பது மனித இருப்பின் ஒரு பகுதியாக உள்ளது. தலைவியானவள் போருக்குச் சென்ற தன் தலைவனை பிரிகின்றாள். கூதிர் காலமானது மிகுந்த குளிர்ச்சி தன்மையானவை, அவை தலைவிக்கு குளிர்ச்சியினை தந்து, தன் மனதிற்கு குளிர்ச்சியான உணர்வினை தரும் தலைவனை எண்ணி தனிமை உணர்வினை ஏற்படுத்துகிறது. தலைவியானவள் தன் நடத்தையிலிருந்து மாற்றம் கொண்டு செயல்படுகிறாள். ஒப்பனை இல்லா ஓவியமாக திகழ்கிறாள்.

## தலைவனின் கடமை உணர்வு

மனிதன் சமூக வலைப்பட்டு உணர்வுகளோடு விளங்குகின்றான். இன்னொரு ஆன்மாவை காயப்படுத்துவதும் வன்முறைதான். மனிதனின் வளர்ச்சிக்கு அடிப்படையான ஆற்றல் அறிவு, உழைப்பு, பகுத்தறியும் திறன் நகை, போட்டி, தொடர்பு கொள்ளும் பண்பு, கடமை போன்ற உணர்வுகள் தன்னை சுற்றி இருப்பவர்களை காக்க பெருவிருப்பம் கொண்டு இருக்கிறான். ஆற்றல் சார் உணர்வுகளை முறைப்படுத்தும் ஆற்றல் இருந்தால் மட்டும் மனிதன் அவன் மீது சமூகத்தின் மீது நம்பிக்கை கொள்கிறான். பிறர் உணர்ச்சியை புரிந்து கொண்டு தன்னை அவற்றுடன் அடையாளப்படுத்திக் கொண்டு உறவுகளில் புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ளுதல் என்பது சமூக அறிவுத்திறனாகும். பாண்டிய நாட்டில் பகை நட்பு என்ற மூன்றிடத்தில் வேறுபாடு இன்றி ஒப்பக்கருதும் நடுவுநிலை உள்ளமுடையவர்கள் நீதி உடையவர்கள் என்று நெறிப்படுத்தும் பாங்கைப் பிரதிபலிக்கின்றது.

“நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்

சிலரோடு திரித்தரும் வேந்தன் பலரோடு முரணிய பாசறை

தொழிலே” (Muthu Ramamurthy, 2012)

பலர் தடுத்தும் பாசறையில் வேந்தன் வளம் வருதல் அவனது திடத்தை மட்டுமல்லாது காயப்பட்ட வீரர்களை கண்ணில் கண்டு ஆறுதல் கூறும் நிலையும் கூறப்படுகின்றன ஒரு பால் காதலும் மறுப்பால் கடமையும் சித்தரிக்கப்படுகின்றன. அவனது கடமை உணர்வு இங்கு புலப்படுத்துகிறது.

## தன்னை காத்துக் கொள்ளும் உணர்வு

மனிதனின் உடலில் பிறந்தது அச்சம் அவனது ஆழ்மனதில் உறைந்திருக்கும் இது அவனது வாழ்நாள் முழுவதும் அவனைத் தொடர்வது இயற்கையின் அதிசயம் மரணம் உடைமை இழப்பு, உடல் நசிவு பொருள் இழப்பு பிற உயிரினங்களில் இருந்து பாதுகாப்பற்ற நிலை என இது பல முகங்களை கொண்டதாக மனிதனோடு ஒன்றிணைந்து இருக்கிறது. ஒரு ஆபத்தான சூழலில் தன்னைக் காத்துக் கொள்ள உள்ளுணர்வு கொண்டு உணரப்படுவது தற்காப்பு உணர்ச்சியாகும். தன்னையும் தன்னை சார்ந்துள்ள சமூகத்தையும் காப்பதை குறிக்கும்.

“ஏற்பு இறங்கிய தலைய தளிறுளம் படுத்த

பெருஞ்சை ஆடவர் ஒளிரு வாள் விழுப்பும்

காணிய புறம்போக்கு வடந்தைத் தன் வழி

ஏறி தரும் நொடங்கி தெற்கு” (Muthu Ramamurthy, 2012)

பாண்டியனிடம் தற்காப்பு படிமுறை உள்ள நிகழ்வாக இயங்குகிறது பாசறையில் மன்னன் உலா வருவது தன்னை காத்துக் கொள்ளவும் தன்னை சார்ந்திருக்கும் சமூகத்தை காத்துக் கொள்ளவும். வீரர்களின் செயல்பாடுகளுக்காக இயக்குவதை பார்க்க முடிகிறது. பாண்டிமா தேவியின் காதல் உணர்வாளும் கனவு துணைவில் இயங்கி தன்னை பாதுகாக்க முனைகிறது.

## முடிவுரை

மனிதனிடம் தோன்றும் அனைத்து விதமான திறங்கள் சுயமான செயல்கள் தகவல் அமைக்கும் செயல்கள் கடமை உணர்வு போன்ற எதார்த்தமான குறித்த புலன் உணர்வு அனைத்தும் மனிதனின் உணர்ச்சியால் வெளிப்படுபவையே. ஒரு மனிதன் தன் உணர்வால் தன் மனத்தை கட்டமைப்பவனாக இருக்கிறான் என்பது இக்கட்டுரையின் மூலம் புலப்படுகிறது நீண்ட நல்ல வாடை என்ற பொருள் கொண்ட தலைப்பில் உள்ள நெருநெல்வாடையில் பொழுதுகள் சார்ந்த உணர்வுகளை இக்கட்டுரை விளக்கியது. காலத்தின் தன்மை நிலையை உணர்வால் அறிந்த மக்கள் தனது நடத்தையில் இருந்து

புணர்ச்சிகள் மூலம் மாற்றம் கண்டு காலச் சூழலுக்கு ஏற்றார்போல் செயல்படுகிறார். தன் மனதிற்கு குளிர்ச்சி தரும் தலைவனை விட்டு பிரிந்த தலைவியின் நிலை தனிமை உணர்வு கொண்டு அவளை மிகவும் துயர படுத்துகின்றது. பாசறையில் தங்கி உள்ள தலைவன் கடமை உணர்வாளும் தலைவியின் பிரிவு துன்ப உணர்வாலும் துயரப்படுகிறான் என்பதை காட்டுகிறது

## References

Kathir Muruku, (2018) Pattinapalai Nedunalvadai Source and Text, Saradha Publishing House Chennai, India.

Muthu Ramamurthy, (2012) Nedunalvadai Source and Text, Gaura Publishing Group, Chennai, India.

Ravichandran, D.K. (2015) Sigmund Freud: The Science of Psychoanalysis, Waves Publishers, Chennai, India.

Saminatha Iyer, (2018) Pathupattu Moolam and Nachinarkiniyarurai, Uve Saminatha Iyer Library, Chennai, India.

Sethuraman, (2017) History of Tamil Literature, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License